செய்தி வெளியீட்டு எண்–570 நாள்–15.7.2008

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாட்டில் செவிலியர் பட்டப் படிப்பில் (B.Sc., Nursing) மாணவர்கள் சேருவதற்கு குறைந்தபட்ச வயது 17 என்று தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதிகபட்ச வயது நிர்ணயிக்கப்படவில்லை. செவிலியர் பட்டயப் படிப்பில் (Diploma in Nursing) சேருவதற்கு குறைந்த வயது 17 என்றும், அதிகபட்ச வயது 25 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. செவிலியர் பட்டப் படிப்பு மற்றும் செவிலியர் பட்டயப் படிப்புகளில் மாணவிகள் சேருவதற்கு தற்போதுள்ள வயது வரம்பினை 35–ஆக உயர்த்தவும், பள்ளி மேல் நிலை தேர்வில் எந்தப் பாடத்தில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், செவிலியர் படிப்புப் பிரிவுகளில் சேரத் தகுதி பெற்றவர்கள் என்று அறிவிக்கக்கோரியும் பொது மக்களிடமிருந்தும், ஒரு சில செவிலியர் கல்லூரிகளிடமிருந்தும் கோரிக்கை அரசுக்கு வரப்பெற்றது.

3. இந்த கோரிக்கைகளை அரசு கவனமாக ஆய்வு செய்தது. செவிலியர் பட்டப்படிப்பு மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு ஆகிய இரண்டு படிப்புகளுக்கும் சேருவதற்கு குறைந்த பட்ச வயது 17 எனவும் அதிக பட்ச வயது 30 எனவும் நிர்ணயம் செய்து அரசு தற்போது ஆணையிட்டுள்ளது. இந்த இரண்டு படிப்புகளுக்கும் மாணவர் மற்றும் மாணவிகள் 30 வயது வரையிலும் சேரலாம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் 35 வயது வரையில் சேரலாம். இதற்கான ஆணைகள் அரசாணை (நிலை) எண்.216 ம.ந. (ம) கு.ந. துறை, நாள் 3.7.2008–ல் வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலும் செவிலியர் பட்டம் மற்றும் பட்டயப் படிப்புப் பிரிவுகளில் சேர, பிற மாநிலங்களில் உள்ளதைப் போன்று பள்ளி மேல்நிலைத் தேர்வில் அறிவியல் பாடத்தை எடுத்தவர்கள் சேரத் தகுதி பெற்றவர்கள் என்றும் மேற்கண்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி +2 தேர்வில் கணிதம், உயிரியல், வேதியியல், இயற்பியல் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள்; உயிரியல், தாவிரவியல், வேதியியல், இயற்பியல் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் கணிதம், வேதியியல், இயற்பியல், கம்ப்யூட்டர் சயின்ஸ் பாடப்பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆகிய மூன்று பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்களும் மேற்கண்ட இரண்டு செவிலியர் படிப்புகளிலும் சேரலாம். இந்த ஆணைகள் நடப்பு 2008–09–ம் கல்வி ஆண்டு முதல் அமுல்படுத்தபட உள்ளது.

வி.கு. சுப்புராஜ்,
அரசுச்செயலாளர்,
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.